யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.

# J/ Hartley College, Point Pedro.

விடுமுறைக்கால செயலட்டை- 02 –2020 – தரம் 11

**Holiday Worksheet– 02 - 2020 – Grade 11**

| | | | | |
|---|---|---|---|---|
| வரலாறு | 33 | T | I,II | மூன்று மணித்தியாலம் Three Hours |

சுட்டெண் Index No

## வரலாறு

**பகுதி – I**

01. இலங்கையின் அரசியல், மதத் தகவல்களை தொடர்ச்சியாகக் கொண்டமைந்த நூல் யாது?
   1. தீபவம்சம்   2. மகாவம்சம்   3. சூளவம்சம்   4. தாது வம்சம்

02. இலங்கையில் தொல்லியல் ஆய்வுகள் மூலம் பல்வேறு நாட்டு நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவ்வாறு கண்டெடுக்கப்பட்ட நாயணயங்கள் எந்நாடுகளுக்குரியன.
   1. சீனா, பர்மா, யாவா   2. இந்தியா, கம்போஜ, மலாய்
   3. சீன, இந்திய, அரேபிய   4. உரோம், பெல்ஜிய, எகிப்திய

03. “சீதாவாக்க சட்டன” காவியமானது எக்கால வரலாற்றை அறிய கூடிய நூலாகக் காணப்படுகிறது.
   1. பொலநறுவைக்காலம் தொடாக்கம் தம்பதெனிய காலம் வரை
   2. தம்பதெனிய காலம் தொடக்கம் கோட்டை காலம் வரை
   3. கம்பளைக்காலம் தொடக்கம் கோட்டைக்காலம் வரை
   4. கோட்டைக்காலம் தொடக்கம் கண்டிக்காலம் வரை

04. கல்வெட்டுக்களில் உறுதிப்பாட்டினைச் சித்தரிக்கபகப்பயன்படும் குறியீடுகள் எவை?
   1. நிறைகுடம், எருது   2. சூரியன், சந்திரன்   3. அம்பு, வில்   4. யானை, சிங்கம்

05. புராதன இலங்கையின் இலக்கிய சமயத்தகவல்கள் மற்றும் வம்சக்கதைகள் என்பன எவற்றில் எழுதப்பட்டன.
   1. ஓலைச்சுவடிகளில்   2. கற்றூண்களில்   3. கற்குகைகளில்   4. செப்பேடுகளில்

06. பாகியன்கல கற்குகையானது எக்கால மனிதனின் வாழிடமாகக் காணப்பட்டது.
   1. வரலாற்றுக்கு முற்பட்ட காலம்   2. ஆதிவரலாற்றுக் காலம்
   3. முன் வரலாற்றுக்காலம்   4. வரலாற்றுக்காலம்

07. பின்வரும் நிரல் I இல் தரப்பட்டுள்ள தகவல்கள் நிரல் II இல் தரப்பட்ட தரவுகளுடன் தொடர்புபட்டுள்ளன. நிரல் I இற்கு அமைவாக நிரல் II ஒழுங்குபடுத்தும்போது பெறப்படும் சரியான விடை யாது?

| நிரல் - I | நிரல் - II |
|---|---|
| I. தித்தியா | A – குளம் |
| II. காட்டுப்பலாவிதை | B – அணைக்கட்டு |
| III. சிறிய குன்றுகள் | C – கித்துள்கல பெலிவன |
| IV. அமுன | D – தாழ்நில ஈரவலயப்பரப்பு |

   1. BCDA   2. DABC   3. DCAS   4. ACDB

08. “பருமக ஒருவனின் பிரதான கடமையாகக் காணப்படுவது
1. அரசனுக்கு வரி வசூலிப்பது
2. அரச நிலங்களை நிர்வகிப்பது
3. கமிகமாரைக் கண்காணிப்பது
4. குளத்தொகுதிகளுக்கு பொறுப்பாக இருத்தல்

09. அனுராதபுரத்தினை வடிவமைத்து ஒழுங்கமைப்புடன் கூடிய மத்திய நிர்வாக நிலையமாக உருவாக்கியன்?
1. விஜயன் 2. 5ம் மகிந்தன்
3. பண்டுகாபயன் 4. தேவநம்பிய திஸ்ஸ

10. ‘வெவ்பிரபாதனய’ என்ற சொல் குறிப்பது
1. அணைக்கட்டு 2. குளம் 3. ஆற்றுவளைவு 4. குளத்தொகுதி

11. நரேஸ்வர எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட மன்னன்
1. பாதிகாபயன் 2. காசியப்ப
3. தேவநம்பிய திஸஸ் 4. குட்டகண்ண அபய

12. இலங்கை வரலாற்றில் முதன்முதலில் ஆற்றுக்குக் குறுக்காக அணைகட்டிய மன்னன்
1. இளநாக மன்னன் 2. தாதுசேனன் 3. மகாபராக்கிரம பாகு 4. வசபன்

13. அரச நிர்வாகத்தைக் கொண்டு நடாத்துபவர்களில் “ஹதிஅதேக” என்பவர் எப்பிரிவுக்குத் தலைவராக இருந்தார்
1. குதிரைப்பிரிவிற்கு 2. அரச ஆவணப்பிரிவிற்கு 3. உணவுச்சாலைக்கு 4. யானைப்பிரிவிற்கு

14. கல்வெட்டுக்களில் பிடபிம் என்று குறிப்பிடப்பட்டிருப்பது
1. நெற்செய்கை போகங்களை 2. நெற்செய்கையினை
3. சேனைப் பயிர்ச்செய்கையினை 4. மந்தை வளர்ப்பினை

15. ததவய என அழைக்கப்படுபவர்களின் தொழில் யாது?
1. தந்த வேலை செய்வோர் 2. மட்பாண்டம் செய்வோர்
3. இரும்புருக்கு வேலை செய்வோர் 4. நூல் நூற்பவர்கபள்

16. அனைத்து மக்களும் ஒற்றுமையாக வழிபடும் இடமாக காணப்படுவது.
1. தலதா மாளிகை 2. மடுமாதா 3. கதிர்காமம் 4. ஸ்ரீபாத

17. பண்டைய கால கல்வெட்டுக்களில் ‘ரஜமொஹால்’ எனும் பெயரால் அமைக்கப்படுவது
1. குளக்கட்டு 2. மடைக்கதவு 3. அலைதாங்கி 4. வான்கதவு

18. "வஜ்ரசும்பட்ட” எனும் இடிதாங்கி பொருத்தப்பட்ட விகாரை யாது?
1. தூபராம 2. அபயகிரி 3. ரூவன் வெலிசாய 4. லோகமகாபாய

19. பதினெட்டு வைத்தியசாலைகளை அமைத்து மக்களுக்கு பணிபுரிந்ததாக வம்சக்கதைகளில் கூறப்படுகிறது. இப்பணியினைப் புரிந்த மன்னன் யார்?
1. துட்டகைமுனு 2. புத்ததாச 3. பண்டுகாபயன் 4. காசியப்பன்

20. புராதன இலங்கையில் நிலத்தினை அளவீடு செய்யப்பயன்படுத்தப்பட்ட அலகு யாது?
1. மாசக்க 2. அக்க 3. தரண 4. அவனம்

21. தொலமி இலங்கையினை எவ்வாறு குறிப்பிட்டடார்.
1. செயிலான் 2.தப்ரபேன் 3. செரலண்டிப் 4. தம்பபன்னி

22. கி.பி 1247இல் யாவா நாட்டில் இருந்து இலங்கையினை ஆக்கிரமிக்க வந்த ஆக்கிரமிப்பாளன் யார்.
1. மாகன்  2. யாவகன்  3. சந்திரபானு  4. செங்ஹோ

23. தனது அரசுரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள தொனாகதெரீனாவை திருமணம் செய்த மன்னன்
1. இரண்டாம் இராஜசிங்கன்  2. இராஜாதி இராஜசிங்கன்
3. முதலாம் விமலதர்ம சூரியன்  4. ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கன்

24. கண்டி இராச்சியத்தின் நிர்வாகக் கட்டமைப்பின் வரி ஒழுங்கமைப்பில் ஹெந்த பத்த எனக் குறிப்பிடப்படும் அமைப்பிற்கு வழங்கப்பட்ட செயற்பாடு யாது?
1. போக்குவரத்து  2. நெசவு செய்தல்  3. கறுவா வெட்டுதல்  4. யானை பிடித்தல்

❖ **கீழ்வரும் அட்டவணையில் A – J வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 25ம் 26ம் வினாக்களுக்கு விடை தருக**

| அரசன் | இடம் | இராணுவ அதிகாரி |
|---|---|---|
| A -1ம் விமலதர்ம சூரியன் | D – ரந்தெனிவல | G – தியோகு த மேலோ |
| B – 1ம் இராஸசிங்கன் | E – தந்துரே | H – ஹொன்ஸ்தாந்தி நுதசா |
| C – 2ம் இராஸசிங்கன் | F – முல்லேரியா | I – பெரோ லோபேஸ் தசூசா |

25. ரந்தெனிவலை போருடன் தொடர்புடைய கண்டி அரசனும் போர்த்துக்கேய இராண அதிகாரியையும் குறிப்பிடப்பட்டுள்ள விடை தருக.
1. A, G  2. G, H  3. C, H  4. C, I

26. முதலாம் விமலதர்ம சூரியன் போர்த்துக்கேயருடன் போரிட்ட இடத்தினையும் அதன் போது போர்த்துக்கேய இராணுவத்தை வழிநடத்திய அதிகாரியையும் குறிப்பிடும் விடை யாது?
1. D, G  2. B, H  3. E, J  4. F, G

27. ஐரோப்பிய மறுமலர்ச்சி காலத்தில் பிரபலமானவர்களின் பெயர்கள் நிரல் Iஇலும் அவர்கள் பிரபல்யம் அடைந்த துறைகள் நிரல் II இலும் தரப்பட்டுள்ளன. நிரல் Iஇற்கு அமைவாக நிரல் II I ஒழுங்கு படுத்தும் போது பெறப்படும் விடை யாது

| நிரல் - I | நிரல் - II |
|---|---|
| 1. மாட்டின் லூதர் | A. குருதிச்சுற்றோட்டம் |
| 2. நிக்கலஸ் கொப்பனிக்கஸ் | B. அச்சியந்திரம் |
| 3. வில்லியம் காவே | C. புவிகோளம் |
| | D. சமய சீர்திருத்தம் |

1. BDA  2. CDB  3. DAB  4. DCA

28. கைத் தொழில் புரட்சியின் செல்வாக்கினால் வீதி அமைக்கப்படும் முறையினை அறிமுகப் படுத்தியவர் யார்?
1. ஜோர்ஜ் ஸ்டீவின்சன்  2. ஜோன் மெக்கடம்  3.ஸென்றி பெல்  4. டெப்லர்

29. 1803ஆம் ஆண்டு கண்டி மீதான ஆங்கிலேயரின் படையெடுப்பு படு தோல்வியில் முடிவடைந்தது. இப்படையெடுப்பினை மெற்கொண்ட ஆளுனர் யார்
1. பிரட்ரிக் நோத்  2. றொபேட் பிரவுன்ரிக்  3. தோமஸ் மெயிட்லண்ட்  4. ரொரிங்டன்

30. ஆங்கிலேய உளவாளியான ஜோன் டொய்லி யாரிடம் சிங்கள மொழியினை கற்றுக் கொண்டார்
1. குணானந்த தேரர்  2. ஸ்ரீசுமங்கல தேரர்
3. வஸ்கடுவே ஸ்ரீ சுபுதி தேரர்  4. கரந்தொதட்ட தர்ம ராம பௌத்த பிக்கு

31. 1848 ஆம் ஆண்டு போராட்டத்தின் மத்திய நிலையமாக விளங்கிய இடம் யாது?
1. குருநாகலை  2. வாரியபொல  3. மாத்தளை  4. கம்பளை

32. ஆறுமுக நாவலர் அவர்களால் முதலில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை யாது,
 1. யாழ் இந்துக்கல்லூரி 2. வண்ணார் பண்ணை சைவ பிரகாச வித்தியாசாலை
 3. கோப்பாய் நாவலர் வித்தியாசாலை
 4. சைவ ஆங்கில வித்தியாசாலை

33. இலங்கையில் முதன்முதலில் வாக்குரிமை வழங்கிய யாப்பினையும் சர்வசன வாக்குரிமை வழங்கிய யாப்பினையும் ஒழுங்கு முறையில் தருவது.
 1. டொனமூர், சோல்பரி 2. கோல்புறூக், டொனமூர்
 3. குறு மெக்கலம், சோல்பரி 4. குறு மெக்கலம். டொனமூர்

34. இலங்கையில் கோப்பிச் செய்கையினை அறிமுகப்படுத்தியவர்கள்?
 1. ஒல்லாந்தர் 2. போர்த்துக்கேயர் 3. ஆங்கிலேயர் 4. சீனர்

35. இலங்கையில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட அரசியற் கட்சி யாது?
 1. ஐக்கிய தேசிய கட்சி 2. இலங்கை சமசமாஜ கட்சி
 3. கம்யூனிஸ்ட் கட்சி 4. இலங்கை சுதந்திரக்கட்சி

36. டொனமூர் அரசியல் யாப்பின் பிரகாரம் அமைக்கப்பட்ட ஆட்சியில் விவசாயம் காணி அமைச்சராக பொறுப்பேற்றவர் யாா?
 1. J.R ஜெயவர்த்தன 2. கொல்வின் R.D சில்வா 3. டட்லி சேசநாயக்க 4. D.S சேனநாயக்க.

37. சுதந்திர இலங்கையில் முதலில் ஆட்சி அமைக்க தலைமை தாங்கிய கட்சி யாது?
 1. லங்கா சமசமாஜ கட்சி 2. ஐக்கிய தேசிய கட்சி
 3. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 4. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி

❖ **கீழே A – G வரையில் தரப்பட்ட கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 38 – 40 வரை வினாக்களுக்கு விடை தருக.**

A - ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆரம்பிக்கப்பட்டமை
B – விகிதாசார ரீதியான தெர்தல் முறைமை
D - இலங்கையில் இறுதி ஆளுனர்
E – பிக்கு ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டமை
F - இலங்கையில் முதல் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி
G - இலங்கையின் முதலாவது பெயரளவு ஜனாதிபதி

38. J.R ஜெயவர்த்தனவுடன் தொடர்புடைய கூற்றுக்கள் கொண்ட விடை எது
 1. Aயும் Bயும் 2. Aயும் Fஉம் 3. Bயும் Fஉம் 4. Bயும் Gயும்

39. S.W.R.D பண்டாரநாயக்கவுடன் தொடர்புடைய கூற்றுக்களை கொண்ட விடை எது?
 1. Aயும் Eயும் 2. Bயும் Gயும் 3. Dயும் Eஉம் 4. Aஉம் Fஉம்

40. வில்லியம் கோபல்லாவ உடன் தொடர்புடைய கூற்றுக்களை கொண்ட விடை
 1. Aயும் Cயும் 2. Dயம் Fஉம் 3. Dயும் Gயும் 4. Eயும் Gயும்

## பகுதி – II

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

## பகுதி – I

01. அ. கீழே I இல் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் இலங்கைப்படத்திலும் IIஇல் தரப்பட்டுள்ள வரலாற்று இடங்களை உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

I. மாணிக்ககங்கை, கோகர்ண, நுவர, இராட்சத குளம், நல்லூர், களுகங்கை, சல்வத்தோட்ட, பாகியன்கல, கலாவாவி, ஸ்ரீஜெயவர்த்தன புர கோட்டை, ஹெமன்ஹலில், மகியங்கன

(12 புள்ளிகள்)

II. உரோம், யாவா, மும்பை, ஹொன்ஸ்தாந்திநோபிள், செங்கடல், போர்த்துக்கல்

(06 பள்ளிகள்)

ஆ. கீழ்வரும் A, B, C, D ஆகிய வரலாற்று தகவல்களுடன் தொடர்புடைய விடைகளைத் தருக.

i. a. அநுராதபுரத்தின் கடைசி மன்னன் யார்?
   b. சோழர்களை விரட்டி பொலநறுவையை தலைநகராக்கியவர்
   c. யாழ்ப்பாண இராச்சியத்தினை ஆட்சி புரிந்த இறுதி மன்னன்
   d. சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமர்

(4 புள்ளிகள்)

**A, B ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் எழுதுக.**



ii. 1. Aயினால் காட்டபட்டுள்ள நிர்மாணியின் பெயர் யாது?
   2. இது எவற்றினால் ஆக்கப்பட்டுள்ளது?
   3. எந்த நதிக்கு குறுக்காக அமைக்கப்பட்டுள்ளது?
   4. இந்த நிர்மாணிப்பினால் மக்கள் பெற்றுக் கொண்ட நன்மை யாது?



iii. 1. Bயினால் காட்டப்பட்டுள்ள மனன்னின் பெயர்
   2. இம்மன்னன் ஆட்சி புரிந்த இராட்சியம் யாது?
   3. இம்மன்னனின் இயற்பெயர் யாது?
   4. இம்மன்னன் கைது செய்யப்பட்ட இடம் யாது?

(4புள்ளிகள்)

## பகுதி – II

02. i. கோட்டை இராசதானிமுதல்டெ கண்டி இராசதானி வரையிலான காலப்பகுதி பற்றிய வரலாற்றை அறிந்து கொள்ள துணை புரியும் இலகிய வகைகள் மூன்றினைத் தருக? (3புள்ளிகள்)
ii. வரலாற்றை அறிந்து கொள்வதற்காக இலக்கிய மூலாதாரங்களைப் பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் 4 தருக. (4புள்ளிகள்)
iii. வரலாற்றை அறிய உதவும் எழுத்தாவணங்கள் மூன்றினைக்கூறி இரண்டினை ஆதாரங்களுடன் விளக்குக. (5புள்ளிகள்)
iv. வரலாற்றினைக் கற்பதன் நன்மைகள் ஆறினைக்கூறி அவற்றில் மூன்றினை விளக்குக.

(6 புள்ளிகள்)

03. i. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த காலநிலை வலயங்கள் 3 தருக. (3புள்ளிகள்)
ii. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த கரையோர வெட்ட வெளிகள் இரண்டும் , தாழ்நில ஈரவலய குகைள் இரண்டும் தருக. (4 பள்ளிகள்)
iii. கற்கால மனிதனின் மரண சடங்குகள் நடைபெற்ற குகைகள் மூன்றினைக் கூறி அவற்றின் இரு குகைளில் நடைபெற்ற சடங்கு முறைகளை விளக்குக. (5புள்ளிகள்)
iv. முன்வரலாற்றுக்காலத்தில் மரணசடங்குகள் நடைபெற்ற மயானங்கள் மூன்றினைக்கூறி அவற்றில் நடைபெற்ற மரணசடங்கு முறைகள் பற்றி விளக்குக. (6புள்ளிகள்)

04. i. புராதன கால இலங்கையில் சமூகத்தில் வழங்கப்பட்ட பதவிப்பெயர்களை ஒழுங்குமுறைப்படி தருக.
   a. குடுதம்பத்தலைவன்
   b. கிராமத்தலைவன்
   c. குளக்கட்டமைப்பின் தலைவர் (3புள்ளிகள்)

ii. அரசுடன் தொடர்புடைய பணிகளுக்கு பொறுப்பானவர்களின் பதவிப் பெயர்களை தருக.
   b. பொருாளளர்
   b. உணவுச்சாலை அதிகாரி
   c. நகர கட்டட நிர்மாணி
   d. காசு அச்சிடும் பிரிவின் தலைவர் (4புள்ளிகள்)

iii. நாட்டு மக்கள் அரசனிடமிருந்து எதிர்பார்த்த சேவைகள் மூன்றினைக்கூறி இரண்டை விளக்குக. (5 புள்ளிகள்)

iv. துட்டகைமுனு மன்னன் இந் நாட்டிற்கு ஆற்றிய அரசியல் பணிகள் மூன்றினைக் கூறி விளக்குக. (6 புள்ளிகள்)

05. i. வரலாற்று காலத்தில் பாரிய குளங்களை அமைத்தமையின் நோக்கங்கள் 3 தருக (3 புள்ளிகள்)

ii. இலங்கை வரலாற்று காலத்தில் தலைசிறந்த நிர்மாணமாக விளங்குவது பாரிய குளங்களை அமைத்தமையாகும் அவ்வாறு அமைக்கபட்ட நான்கு குளங்களை தருக. (4 புள்ளிகள்)

iii. குளங்கள் தொடர்பான முக்கிய தொழில்நுட்பக் கூறுகள் மூன்று கூறி இரண்டை விளக்குக. (5புள்ளிகள்)

iv. வரலாற்றுக்காலத்தில் கட்டடத் தொழினுட்பம் சிறந்து விளங்கயமைக்கு ருவன்வெலிசாய தாதுகோபுரம் சிறந்த எடுத்துக்காட்டாகும். ரூவன் வெலிசாயவில் பிரயோகிக்கப்பட்ட தொழினுட்பச் சிறப்புக்களைக் கூறி விளக்குக. (6புள்ளிகள்)

06. i. புராதன இலங்கயைில் வரிச்சட்டத்தின் மூலம் அறவிட்ட முக்கிய வரிகள் 3 தருக (3புள்ளிகள்)

ii. பண்டைய சமுதாயத்தில் நிலவிய வர்த்தகத்தை ஒழுங்கமைக்க 4ம் உதய மன்னனால் அமைக்கப்பட்ட பதுளைத் தூண் கல்வெட்டில் கூறும் விடயங்கள் 4 தருக. (4புள்ளிகள்)

iii. பொலநறுவைல இராச்சியம் வீழ்ச்சி அடைந்தமைக்கான காரணங்கள் மூன்று கூறி இரண்டினை விளக்குக (5புள்ளிகள்)

iv. 2ம் பராக்கிரமபாகு மன்னனின் சேவைகள் 3 கூறி விளக்குக.(6புள்ளிகள்)

07. i. கண்டி இராசதானியில் காணப்பட்டவரியமைப்பு ஐந்து பிரிவுகளைக் கொண்டது அவற்றில் 3 தருக (3புள்ளிகள்)

ii. கண்டி இராச்சியத்திலிருந்த நிலம் அனைத்தும் அரசனுக்கே உரியது எனினும் உரிமையையும் அனுபவித்தலையும் அடிப்படையாகக் கொண்டு நிலம் வகைப்படுத்தப்பட்ட முறைகள் நான்கினைத்தருக. (4 புள்ளிகள்)

iii. a. முதலாம் விமலதர்ம சூரியன் மன்னன் கண்டி இராச்சியத்தில் சட்டபூர்வத்தன்மையை நிலை நாட்ட மேற்அெகாண்ட நடவடிக்கைகள் மூன்றினைத் தருக. (3புள்ளிகள்)

b. இம்மன்னன் பௌத்த சமயத்தை எழுச்சியுறச்செய்ய மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டை தருக. (2புள்ளிகள்)

iv. கண்டி இராச்சியத்தில் விவசாயம், கைத்தொழில் என்பன ஒழுங்கமைக்கப்பட்ட முறைகளை விளக்குக. (6புள்ளிகள்)

## பகுதி – III

08. i. இலங்கையினை ஆட்சி செய்த மேலைத்தேயர் மூவரினத் தருக. (3 புள்ளிகள்)

ii. புராதன இலங்கையில் காணப்பட்ட வர்த்தகப் பொருட்கள் 4 தருக (4 புள்ளிகள்)

iii. கரையோரப்பிரதேசங்களை ஆட்சி செய்தஅந்நியர்களினால் கண்டி இராச்சியம் கைப்பற்ற முடியாமல் போனமைக்கான காரணங்களைத் தந்து விளக்குக. (5 புள்ளிகள்)

iv. a. 1818 சுதந்திரப் போர் ஏற்பட்டமைக்கான காரணங்கள் மூன்றினை விளக்குக (3புள்ளிகள்)

v. b. 1818, 1848போராட்டங்கள் தோல்வியடைந்தமைக்கான காணங்களை பட்டியலிடுக. (3புள்ளிகள்)

09.i. பிரித்தானியாவில் ஏற்பட்ட கைத்தொழிற்புரட்சியானது மூன்று கைத்தொழில் துறைகளை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ந்தது அத்துறைகள் எவை? (3புள்ளிகள்)

ii. கைத்தொழிற்புரட்சியின் போது கண்டுபிடிக்கப்பட்ட கண்டு பிடிப்புக்கள் தரப்பட்டுள்ளன அவற்றை கண்டு பிடித்தவர்களின் பெயர்களைத் தருக.

A – பறக்கும் நூனாழி

B – பாதுகாப்பு விளக்கு

C – புகையிரதம்

D – மோட்டார் வண்டி(4 புள்ளிகள்)

iii. கைத்தொழிற்புரட்சியின் விளைவுகளினால் மாற்றமடைந்த துறைகள் மூன்றினைக் கூறி இரண்டினை விளக்குக. (5 புள்ளிகள்)

iv. கைத்தொழிற்புரட்சியானது இலங்கையில் ஏற்படுத்திய தாக்கத்தினை பெருந்தோட்டத்துறை, போக்குவரத்துறை மற்றும் சமூகம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (6 புள்ளிகள்)